# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு - பகுதி II (வெளிவாரி) - 2004/05
## (ஒக்ரோபர்/நவம்பர் – 2006)

# ECO 301 – பணப் பொருளியல்.

நேரம்: 3 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. அ. பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் நிலவிய பிரதான குறைபாடுகளை பணத்தின் பரிமாற்றூடகத் தொழிற்பாடு எவ்வாறு நீக்குகின்றது என்பதினை விளக்கி விமர்சிக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. நவீன பொருளாதாரத்தின் சீரான இயக்கத்திற்கு பணத்தின் தொழிற்பாடுகள் எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன.

(10 புள்ளிகள்)

2. அ. பணத்திற்கான உத்தேச நோக்கக் கேள்வி பற்றிய கெயின்சின் விளக்கத்தை விபரிக்குக.

(12 புள்ளிகள்)

ஆ. இவ்விளக்கம் தொடர்பாக எழுந்த விமர்சனங்களை எடுத்துக் கூறுக.

(08 புள்ளிகள்)

3. அ. பணநிரம்பலை எவ்வாறு வரையறுப்பீர்?

(04 புள்ளிகள்)

ஆ. ஒரு பொருளாதாரத்தில் பணநிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகளைத் தருக.

(10 புள்ளிகள்)

இ. இலங்கையின் பணநிரம்பலில் இடம்பெறும் $M_2 6$ என்ற அம்சத்தை விளக்குக.

(06 புள்ளிகள்)

4. "பணவீக்கம் தொடர்பாக கேள்வித்தூண்டல் விளக்கத்தையும், செலவுத்தூண்டல் விளக்கத்தையும் தனித்தனியே பிரித்து நோக்குவது பொருத்தமற்றது." ஆராய்க.

(20 புள்ளிகள்)

5. அ. ஒரு நாட்டின் நிதிமுறைக்கு அந்நாட்டின் வணிக வங்கிகள் வழங்கும் பல்வேறு பணிகளை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியானது வணிக வங்கிச் சேவைகளை வாடிக்கையாளரது வீடு நோக்கி நகர்த்தியுள்ளமை பற்றிய உமது கருத்து என்ன? விளக்குக.

(10 புள்ளிகள்)

6. ஒரு நாட்டின் நாணயக் கொள்கையை வகுப்பதிலும் அமுல்படுத்துவதிலும் மத்திய வங்கிகள் எவ்வாறு பணியாற்றி வருகின்றன. இலங்கையை அடிப்படையாகக் கொண்டு உமது விடையை விளக்குக.

(20 புள்ளிகள்)

7. அ. பிலிப்ஸ் வளையியின் பின்னனியை எவ்வாறு விளக்குவீர்?

(10 புள்ளிகள்)

ஆ. வேலையின்மை, பணவீக்கம் ஆகியவற்றிடையே ஒன்றினை மற்றையதற்காக விட்டுக் கொடுத்தல் என்ற வகையில் நோக்குவது ஒரு பொய்யான நிலைப்பாடாகும் என ஏன் நம்பப்படுகிறது. உமது விடைக்குக் காரணங்கள் தருக.

(10 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றிற்கு சுருக்கமாக விளக்கம் தருக.

1. சர்வதேச நாணய நிதியம் (IMF)
2. வங்கி சாரா நிதியியல் நிறுவனங்கள்
3. உலக வங்கி (World Bank)
4. இலங்கையில் கிராமிய வங்கிகள்

(20 புள்ளிகள்)